

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 68 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 31 – வியாழக்கிழமை 17 அக்டோபர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 68 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 31 - Thursday 17 October 2024 - Dak 12 Pages ₹ 5.00


## அரசு மேற்கொண்ட மழைநீர் வடிகால் பணிகள் கை கொடுத்துள்ளன!

# சென்னை - புறநகர் பகுதிகளுக்கு நிரந்தரத்தீர்வு நிச்சயம் கிடைக்கும்!

## கிண்டி ரேஸ் கோர்ஸ் – பள்ளிக்கரணையில் ஆய்வு நடத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, அக்.17-**

**கிண்டி ரேஸ் கோர்ஸ் - பள்ளிக்கரணையில் ஆய்வு நடத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டி யளிக்கையில், "அரசு மேற்கொண்ட மழை நீர் வடிகால் பணிகள் தேங்கிய மழை நீர் வடிய கை கொடுத்துள்ளன என்றும் சென்னை - புறநகர் பகுதிகளுக்கு நிரந்தரத்தீர்வு நிச்சயம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.**

கிண்டி ரேஸ் கிளப் நிறுவனத்துக்கு தமிழக அரசு சார்பில் 160 புள்ளி 86 ஏக்கர் நிலம் கடந்த 1945ம் ஆண்டு முதல் 99 ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. இந்த நிலத்தின் குத்தகையை ரத்து செய்து, பூங்கா, பசுமைவெளி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. கிண்டி ரேஸ் கிளப்பில் இயங்கிய இடத்தை பசுமைப் பூங்காவாக மாற்ற அரசு முடிவெடுத்துள்ள நிலையில், நீர்நிலையுடன் கூடிய பூங்காவாக உருவாக்கினால் பெரு மழை காலங்களில் அதிக அளவு நீரைச் சேமித்தை, வெள்ள பாதிப்பை தடுக்க முடியும் என்று முடிவெடுக்கப்பட்டு உள்ளது.

இதன் அடிப்படையில், கிண்டி ரேஸ் கிளப்பில் மழை நீரை சேமிக்கும் வகையில் 4 புதிய குளங்களை வெட்டும் பணியை சென்னை மாநகராட்சி தொடங்கியுள்ளது. இந்நிலையில் சென்னை ரேஸ்கோர்ஸ் மைதானத்திற்குச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிதாக அமைக்கப்படும் நீர் நிலைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அதிகாரிகள் நீர் நிலைகள் அமைப்பது குறித்து முதலமைச்சருக்கு விளக்கம் அளித்தனர்.

ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் ஏற்கனவே 3 குளங்கள் உள்ள நிலையில் தற்போது புதிதாக 4 குளங்கள் அமைக்கப்படுவதால் 100 மில்லியன் லிட்டர் வரை தண்ணீரை சேமிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிண்டி ரேஸ் கோர்ஸ் பகுதியில் ஆய்வு செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேளச்சேரி, பள்ளிக்கரணை பகுதியில் ஆய்வு மேற்கொண்டார்.

வேளச்சேரி பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் குறித்து அதிகாரிகள் அப்போது எடுத்துரைத்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2024) சென்னை, கிண்டி ரேஸ் கிளப் நிர்வாகத்திடமிருந்து மீளப்பெறப்பட்ட நிலத்தில் ஏற்கனவே உள்ள 3 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக ஆழப்படுத்தி அகலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிதாக குளம் வெட்டும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

'பல இடங்களில் தேங்கிய வெள்ளநீர் வடிந்துள்ளது. மழைநீர் வடிகால் பணிகள் நல்ல முறையில் கைகொடுத்துள்ளது. மக்களிடமே கேளுங்கள். கடந்த 3 மாதங்களாகவே பருவமழைக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திருப்புகழ் தலைமையில் இதற்கென ஒரு குழு அமைத்து பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த குழு பரிந்துரைத்த பணிகளை படிப்படியாக செய்து வருகிறோம். முழு பணிகளையும் விரைவில் முடிப்போம்.

மழை, வெள்ள மீட்புப் பணிகளில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள், ஊழியர்களுக்கும் நன்றி' என்று கூறினார்.

## கனமழை: முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால்

# 131 மி.மீட்டர் மழை சூழ்ந்த நீர் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டது!

## சென்னையில் 21 சுரங்கப்பாதைகளில் தேங்கிய மழை நீரும் அகற்றம் – மக்கள் மகிழ்ச்சி!

**சென்னை, அக்.17-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் சென்னை மாநகரில் நேற்று 131 மி.மீ அளவில் தொடர்ந்து வடகிழக்குப் பருவ மழை பொழிந்தும் சென்னையில் 21 சுரங்கப் பாதைகளில் மழைநீர் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2024) சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர். செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும் என்ற வானிலை மைய எச்சரிக்கையைத் தொடர்ந்து, மழை பெய்து வரும் நிலையில், வட சென்னை பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து எழிலகத்தில் உள்ள பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு மையத்தில் நேரடி யாகச் சென்று மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையொட்டி கனமழையை எதிர் கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 30.9.2024 மற்றும் 14.10.2024 ஆகிய தேதிகளில் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, கனமழையின் தாக்கத்தினை எதிர்கொள்ள பொதுமக்களின் பாதுகாப்பு கருதி பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசு உயர் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் பல்வேறு பகுதி களுக்கு இரவு பகல் பாராமல், நேரிடையாக சென்று மழை நீர் அகற்றும் பணிகளை பார்வையிட்டு துரிதப்படுத்தி னார். அதே போன்று அமைச்சர் பெருமக்களும் முதலமைச்சர் அவர்களின் ஆணைப் படி, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை துரிதப் படுத்தினர்.

நேற்று சென்னை மாநகரில் தொடர்ந்து 131 மி.மீ. அளவிற்கு அதிகமாக மழை பொழிந்ததால், 21 சுரங்கப்பாதைகளும் மழைநீர் தேங்கியது. சென்னை மாநகராட்சியும், பொதுப்பணித்துறையும், வருவாய்த் துறையும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் உள்ளிட்ட துறைகள் இணைந்து போர்க்கால அடிப்படையில் மழைநீர் அகற்றும் பணியினை மேற்கொண்டது. அதன் பயனாக

1. கத்திவாக்கம் நெடுஞ்சாலை சுரங்கப்பாதை
2. மாணிக்கம் நகர் சுரங்கப் பாதை
3. வியாசர்பாடி சுரங்கப்பாதை
4. எம்.சி. ரோடு சுரங்கப்பாதை
5. ஸ்டேன்லி நகர் சுரங்கப்பாதை
6. ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதை
7. கெங்குரெட்டி சுரங்கப்பாதை
8. பெரம்பூர் நெடுஞ்சாலை சுரங்கப் பாதை
9. வில்லிவாக்கம் சுரங்கப் பாதை
10. ஹாரிங்டன் சுரங்கப்பாதை
11. நுங்கம்பாக்கம் சுரங்கப் பாதை
12. ஜோன்ஸ் சாலை சுரங்கப் பாதை
13. துரைசாமி சுரங்கப்பாதை
14. மேட்லி சுரங்கப்பாதை
15. ரங்கராஜபுரம் சுரங்கப்பாதை
16. பஜார் ரோடு சுரங்கப்பாதை
17. மவுண்ட் சுரங்கப்பாதை
18. தில்லை கங்கா நகர் சுரங்கப் பாதை
19. பழவந்தாங்கல் சுரங்கப்பாதை
20. அரங்கநாதன் சுரங்கப்பாதை

ஆகிய 20 சுரங்கப்பாதைகளில் தேங்கிய மழைநீர் உடனடியாக அகற்றப்பட்டு, போக்குவரத்து சீர் செய்யப்பட்டு, பொது மக்கள் இயல்பாக இப்பகுதியில் உள்ள சுரங்கப்பாதைகளை பயன்படுத்தப்படும் நிலைகளை ஒரே நாளில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட துரித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும், ஆலோசனைகளும் ஆகும்.

கணேசபுர சுரங்கப்பாதையில் தற்போது தேங்கிய மழைநீர் அகற்றப்பட்டு, போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் 20 செ.மீ. மழை பொழிந்தால் ஒரு வாரத்திற்கு மேல் தேங்கிய மழைநீர் அகற்றும் சூழ்நிலை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை பருவமழையினை எதிர்கொள்ள 1,223 மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு, மழைநீர் போர்க்கால அடிப்படையில் உடனடியாக அகற்றப்பட்டது.

சென்னை பெருநகர மாநகராட்சி சார்பில் 300 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் மழை நீர் தேங்கிய 542 இடங்களில் 412 இடங்களில் உடனடியாக மழைநீர் அகற்றப்பட்டு, மீதமுள்ள இடங்களிலும் மழைநீர் அகற்றும் பணி துரிதமாக நடைறுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 21,000க்கும் மேற்பட்ட களப்பணியாளர்கள் சுழற்சி முறையில் பணி மேற்கொண்டனர்.

சென்னையில் நேற்று 100 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, பொது மக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

சென்னை மாநகரில் சாலைகளில் விழுந்த 67 மரங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு, அங்கு போக்குவரத்து சீர்செய்யப்பட்டன.

அதேபோன்று பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி அனைத்துப் பகுதிகளுக்கும் ஆவின் பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று (15.10.2024) காலை உணவு 1000 நபர்களுக்கும், மதிய உணவு 45,250 நபர்களுக்கும், இரவு உணவு 2,71,685 நபர்களுக்கும், நேற்று (16.10.2024) காலை உணவு 4,16,000 நபர்களுக்கும் என மொத்தம் 7,18,885 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.